# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

---

**முன்னிலை: சு. மூர்த்தி.,**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் , இராமேஸ்வரம் நகராட்சி**

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சியில் ஜல் சக்திமிசன் திட்டம், சாலைகள்பதிவேடு முழுமையாக தயார் செய்தல், பாதாளச்சாக்கடை திட்டம், மேன் கோல் நீரேற்று நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குழாய்கள் தொடரமைப்பு விபரம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைவிடங்கள், குடிநீர் பகிர்மானகுழாய்கள், நீரேற்ற நிலையங்கள் நீர்நிலைகள், மழை நீர் வடிகால் தொடரமைப்பு , சிறுபாலங்கள், தடுப்புச்சுவர் கட்டமைப்புகள், தெருவிளக்குகள், நகரில் உள்ள பள்ளிகள் , மருத்துவமனைகள், அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், சந்தைகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், உரக்கிடங்கு, சுடுகாடுகள், பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தங்கள் போன்ற விரிவான நகராட்சிக்கு, சொந்தமான சொத்துக்கள் அடங்கியவரை படங்கள், latitude and longitude, DGPS, GCP போன்ற புள்ளிவிபரங்களுடன், நவீன தொழில் நுட்பத்துடன் DRONE / UAVTechnology மூலம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 528 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து நிதிஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. ஜல் சக்திமிஷன் திட்டக் கருத்துரு மற்றும் சாலைப்பதிவேடு தொடர்பான வரைபடங்கள் மற்றும் புள்ளிவிபரங்களை அறிக்கையாக, செப்டம்பர் 2021 இறுதிக்குள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம். | |
| **2** | இராமேஸ்வரம் நகராட்சிபகுதிகளில் பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொதுசுகாதாரப் பணிகளை தனியார் நிறுவனத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் தினக்கூலி விலைவிகித அடிப்படையில் 144 பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் செயல்முறை ஆணை எண் K.Dis.No: 7138/P3/2017, நாள் : 07–04–2018–இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>இதனை தொடர்ந்து, 18–04–2018 –இல் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், **The Hand in Hand Inclusive Development and Services** என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை இந்நகராட்சி மன்ற தீர்மானத்தின்படி பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி, இராமேஸ்வரம் நகராட்சிப்பகுதிகளில், பொதுசுகாதாரப்பணிகளான, முதல் நிலைப்பணி, இரண்டாம் நிலைப்பணி, வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிக்கும் பணி , சாலை / தெருக்கள் கூட்டும் | தீர்மானம் எண். 529 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பணி, வாறுகால் சுத்தம் செய்யும் பணிமற்றும் இராமேஸ்வரம் அ.மி. இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு வந்து செல்லும் யாத்ரீகர்களால் அக்னி தீர்த்தம் கடற்கரை, நான்குரதவீதி , பேருந்துநிலையம் மற்றும் இரயில் நிலையம் ஆகியபகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து எடுத்து நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் கொட்டும் பணிமற்றும் திடக்கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்தும் பணிகளை நிபந்தனைகளுக்குட்பட்டு தனியார் மயம் மூலம் **Hand in Hand Inclusive Development and Services** நிறுவனத்தால் மூன்று ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்யப்பட்டு வந்தது. அதன் காலம் **21–06–2021ல்** முடிவடைந்ததாலும் அச்சமயம் கொரோனா முழு ஊரடங்கினாலும் பொதுசுகதார பணிகளின் அவசியம் கருதி மேலும் இரண்டு மாத காலத்திற்கு **(22–06–2021** முதல் **21–08–2021** வரை**)** பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்சமயம் **07.07.2021** அன்று அனுமதி கோரும் கடிதம் தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பரிசீலணையில் இருந்து வரும் நிலையில் ஏற்கனவே **22–08–2021 to 21.09.2021** சுகாதாரபணியின் அவசர அவசியம் கருதி பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் **2** மாத காலத்திற்கு **(22–09–2021** முதல் **21–11–2021** வரை**)** பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள ஆணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>1. அனுமதிக்கலாம்<br>2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு பொதுசுகாதாரப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும் தற்காலிகமாக ஒரு மாதகாலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| | 3. அவசரஅவசியம் கருதிமுன் அனுமதிவழங்கலாம். | |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட தெருமின் விளக்குகளை ஒளி உமிழ்வுடையோடு விளக்குகளாக (Light Emission Diode Lamps) மாற்றுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களின் கடித ந.க.எண்:35871/2014/E1நாள்:08-09-2021-ன் படி தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அதன்படி, இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மின் சேமிப்பு நிறுவனம் (ESCO) பரிந்துரை செய்த குறிப்பிட்ட திறன் கொண்ட (Watts) ஒளி உமிழ்வுடையோடு விளக்குகளாக மாற்றுவதற்கு பணிதேர்வு செய்யப்பட்டு தனிஅலுவலரின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. பணியின் விபரம் பின்வருமாறு<br><br>**S. No** / **Name of Work** / **Cost in Lakhs**<br>1 / Conversion of All Kinds of Street lights into Energy Efficient LED Lights at Municipal limit / 273.00<br>**Total** / **273.00**<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. ஜீரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பித்து, நிர்வாகஅனுமதி பெற்றிட மேல் நடவடிக்கை தொடரலாம். | தீர்மானம் எண். 530 அனுமதிக்கப்பட்டது |
| **4** | போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நூலகங்கள் மற்றும் அறிவுச்சார் மையங்கள் ஏற்படுத்திட விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு தயார் செய்து சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களின் கடித ந.க.எண்:20027/2021/தி2நாள்:08-09-2021-ன் படி தெரிவிக்கப்பட்டு வரப் பெற்றுள்ள கடிதம் | தீர்மானம் எண்.531 அனுமதிக்கப்பட்டது |

| S. No | Name of Work | Cost in Lakhs |
|---|---|---|
| 1 | Conversion of All Kinds of Street lights into Energy Efficient LED Lights at Municipal limit | 273.00 |
| | **Total** | **273.00** |

<table>
<tr>
<td></td>
<td>
மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அதன் படி இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நூலகம் மற்றும் அறிவுச்சார் மையகட்டிடம் ஒன்று கட்டிட கீழ்காணும் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு
<table>
<tr><th>S.No</th><th>Ward No</th><th>Name of Works</th><th>Estimate Amount (Rs. In lakhs)</th></tr>
<tr><td>1</td><td>14</td><td>Construction of Knowledge Centre at Sri Ram Nagar in Ward No:14</td><td>105.00</td></tr>
<tr><td></td><td></td><td>Total</td><td>105.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :
<ol>
<li>அனுமதிக்கலாம்.</li>
<li>ஜீரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களுக்கு சமர்பித்து, நிர்வாக அனுமதி பெற்றிட மேல்நடவடிக்கை தொடரலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>
மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பொதுமக்கள் மற்றும் சிறுவர்களின் பொழுது போக்கு வசதிக்காக விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்திட விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு தயார் செய்து சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:20028/2021/தி2 நாள்:08-09-2021-ன் படி தெரிவிக்கப்பட்டு வரப் பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அதன்படி இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூங்காக்கள் மேம்படுத்திட பணிகள் தேர்வு
</td>
<td>தீர்மானம் எண்.532 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>செய்யப்பட்டு தனிஅலுவலரின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. பணிகளின் விபரம் பின்வருமாறு<br>

| S. No | Ward No | Name of Work | Cost in Lakhs |
|---|---|---|---|
| 1 | 13 | Providing Green Space Park with Play Materials Arrangements at Thillai Nagar | 50.00 |
| 2 | 19 | Providing Green Space Park with Play Materials Arrangements Near Sambai Vinayagar Kovil Road | 50.00 |
| | | **Total** | **100.00** |

<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. விரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களுக்கு சமர்பித்து, நிர்வாக அனுமதி பெற்றிட மேல் நடவடிக்கை தொடரலாம்.</td><td></td></tr>
<tr><td>6</td><td>இராமேஸ்வரம் நகராட்சியில் ட்ரோன் சர்வே / யு.ஏ.வி. டெக்னாலஜி மூலம் நகராட்சிக்கு சொந்தமான பகுதிகளை Asset Mapping சாப்ட் மற்றும் ஹார்டு பிரதிகளில் சர்வே செய்து வழங்கிடும் உத்தேச செலவினத் தொகை ரூ.9,90,000/–க்கு இந்நகர்மன்ற தனிஅலுவலரின் 27–08–2021ம் தேதிய முன் அனுமதி உத்தரவில் ஏற்க்கப்பட்டுள்ளது, மேற்படி பணிமேற்கொள்ள 13–09–2021ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சாய்சக்திகுளோபல் இன்ஃப்ரா சர்வேஸ் பிரைவேட் லிமிடெட்,<br>எண் 2 4 வதுமெயின் சாலை ,<br>ராஜேஷ்நகர் விரிவாக்கம்,<br>பள்ளிக்கரணை, | 66 கி.மீX 15000 / 1கி.மீ = 9,90,000/–<br>(GST 18 % வரிதனியாக) |

</td><td>தீர்மானம் எண்.533 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>சென்னை –100</td><td></td></tr>
<tr><td>2</td><td>ஃகுளோபல்சர்வேஸ்,<br>எண் 19, 3வது மெயின் சாலை,<br>ராஜேஷ்நகர் விரிவாக்கம்,<br>பள்ளிக்கரணை,<br>சென்னை –100</td><td>66 கி.மீX 17000 / 1கி.மீ = 11,22,000/–<br>(GST 18 % வரிதனியாக)</td></tr>
</table>
வரிசை எண் (1)ல் காணும் நிறுவன தினைவிலை குறைப்பு செய்து தர கோரிட சம்மதக் கடிதம் அளிக்க கோரியதில் , மேற்படி நிறுவனத்திடமிருந்து கி.மீ ஒன்றுக்கு 15000/–வீதம் 66 கி.மீட்டருக்கு ரூ.9,90,000/– சரக்கு மற்றும் சேவைவரி உட்பட செய்து தர 17–09–2021ல் சம்மதக் கடிதம் வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :
<ol>
<li>விலை குறைப்பு சம்மதக் கடிதத்தினை ஏற்று ஸ்ரீ சாய்சக்தி குளோபல் இன்ஃப்ரா சர்வேஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம்.</li>
<li>அவசர அவசியம் கருதியும், மேற்படி பணியினை செப்டம்பர் 2021 க்குள் முடித்து உரிய விபரங்களுடன் அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்றுபணி உத்தரவு வழங்கியதையும், மன்றம் ஏற்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>7</td>
<td>இராமேஸ்வரம் நகராட்சியில், கொரோனா வைரஸ் நோய் தொற்று இரண்டாம் அலை தீவிர மடைந்து வரும் நிலையில், பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி போடவேண்டும் எனவும், முகக்கவசம் அணிய வேண்டும் எனவும், கைகளைஅடிக்கடி சோப்பு அல்லது கிருமி நாசினி கொண்டு</td>
<td>தீர்மானம் எண்.534 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | சுத்தம் செய்ய வேண்டும் எனவும், தனி நபர் சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும் எனவும் பொதுமக்களை அறிவுறுத்த வேண்டியுள்ளது. பொதுமக்களை அவரவர் இருப்பிடத்தை விட்டு வெளியில் நடமாட வேண்டாம் எனவும் கொரோனா தொற்றுநோய் பாதித்த பகுதிகளில் கபசுரக் குடிநீர் வழங்குதல் மற்றும் தடுப்பூசி முகாம் நடத்துதல் போன்ற விழிப்புணர்வை மூன்று சக்கர ஆட்டோக்கள் மூலம் ஒலிப்பெருக்கி வைத்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,45,000/– தனிஅலுவலரின் பார்வைக்கும், செலவின அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br><br>1. அனுமதிக்கலாம்.<br>2. மாண்பு மிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறைகளின் படி, அவசர அவசியம் கருதி ,கொரோனா தொற்று நோய் பாதிப்பு அதிகம் ஏற்பட்டு வருவதாலும், வை நோயை தவிர்க்கும் பொருட்டு விழிப்புணர்வு பணி அவசியம் என்பதாலும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |

ஆணையாளர்/தனி அலுவலர்,
இராமேஸ்வரம் நகராட்சி